# ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯ ನಿರ್ಣಯ ಮಂಡಲಿ.
ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD**
Malleshwaram, Bengaluru – 560 003

## 2025-26 ರ ಎಸ್. ಎಸ್. ಎಲ್. ಸಿ. ಮಾದರಿ ಪ್ರಶ್ನೆ ಪತ್ರಿಕೆ

## S.S.L.C. MODEL QUESTION PAPER – 2025-26

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು**

**Subject : First Language - TAMIL**

**ಸಮಯ : 3ಗಂಟೆ 15 ನಿಮಿಷಗಳು** | **ವಿಷಯ ಸಂಕೇತ : 10T**

**ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100** | **Subject Code : 10T**

**ಶಾಲಾ ವಿದ್ಯಾರ್ಥಿಗಳು / Regular Fresh**

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 45ஐ கொண்டுள்ளது.
2. வினாகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை பின் பற்றவும்.
3. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
4. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

Visit CollegeDekho

**I. சரியான விடையை எழுதுக.** **6×1=6**

*1* **நனியுண்டு, நனியுண்டு**

(A) அடுக்குத்தொடர் (B) இரட்ணிடக் கிளவி

(C) இடைச்சொல் (D) வினைச்சொல்.

**2. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல்**

(A) வெற்றி (B) வாகை

(இ) உழிஞ்சை (D) வஞ்சி

**3. கார் அறுத்தான்**

(A) இடவாகுப் பெயர் (B) பொருளாகுப் பெயர்

(C) காலவாகுப் பெயர் (D) சினையாகுப் பெயர்

**4. செய்யுளைச் சொல்லால் அழகு செய்வது**

(A) அணி (B) சொல்லணி

(C) பொருளணி (D) உவமையணி

**5. கண்ணன் பாடினான். இத்தொடரில் பாடினான் என்பது**

(A) இறந்தகாலம் (B) நிகழ்காலம்

(C) வருங்காலம் (D) எதிர்காலம்

**6. செய்யுளில் நான்கு சீர்களைப் பெற்று வருவது**

(A) சிந்தடி (B) குறளடி

(C) அளவடி (D) நெடிலடி.

Visit CollegeDekho

II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக. 4×1= 4

7. தென்னங் : கீற்று

பனை : ______________

8. தாயைப் : போலபிள்ளை

நூலைப்போல : ______________

9. ஔவைக்கு கனி கொடுத்தான் : அதியமான்

முல்லைக்கு தேர் கொடுத்தான் : ______________

10. மகாகவி : பாரதியார்

பாவேந்தர் : ______________

III. ஒரு தொடரில் விடை தருக. 7×1= 7

11. இறைவன் ஆனந்தமா கடலாவது எப்போது ?

12. நல்ல அமுது என்று பாரதிதாசன் எதைக் குறிக்கிறார் ?

13. நம் மக்களுடைய கைப்பட்ட உணவு எப்படிப்பட்டது?

14. திரிகடுகம் என்பதன் பொருள் யாது?

15. இ. ஊ.இ. என்றால் என்ன?

16. யாரைக் கண்டு நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?

17. இளைஞன் தன்னை எதனைப் போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் ?

Visit CollegeDekho

IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக. 10×2= 20

18. உடலுக்கும் செவிக்கும் இன்பத்தை தரவல்லது எவை ?

19. பிரம்மன் ராவணனுக்கு கொடுத்த சாபம் யாது ?

20. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?

21. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன?

22. பாரதிதாசன் கடுகு உள்ளம் கொண்டவர் என்று யாரை கூறுகிறார் ?

23. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

24. இளைஞனின் நண்பன் எது ?

25. அடுக்குத் தொடரை சான்றுடன் விளக்குக.

26. தொடை என்றால் என்ன ?

27. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?

V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக. 4×3= 12

28. உழவின் மேன்மையை பற்றி வள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக.

29. அசோகவனத்தில் சீதை இருந்த நிலையை அனுமான் எவ்வாறு விளக்கினார் ?

30. இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க, சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை விளக்குக.

31. பேராசிரியர் சேது பிள்ளையின் உரையாடல் எவ்வாறு இருக்கிறது ?

Visit CollegeDekho

VI. **குறிப்பு வரைக.** **2×3=6**

32. திருக்குறள்

33. பாரதிதாசன்

VII. **கீழ் வரும் அணியை சான்றுடன் விளக்குக.** **1×3 =3**

34. வேற்றுமை அணி

VIII. **இடம் சுட்டி பொருள் விளக்குக.** **3×3=9**

35. ஆதியே நடுவே அந்தமே பந்தம்

36. அவர்கள் வாழ்வில் ஒருபோதும் வெறுப்பு கொள்ள மாட்டார்கள்.

37. மரம் வளர்த்தால் நரகம் இல்லை

IX. **கீழ் வரும் பழமொழியை விளக்குக.** **1×3=3**

38. பாம்பின் கால் பாம்பறியும்

அல்லது

ஞாயிற்றை கை மறைப்பார் இல்

Visit CollegeDekho

X. அடிபிறழாமல் எழுதுக. 1×4=4

39. ''சோதியாய்த் தோன்றும்'' எனத் தொடங்கும் பாடல்.

அல்லது

''பட்டங்கள் ஆள்வதும்'' என வரும் பாடல்.

XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக. 2x 4= 8

40. அனுமான் சீதையிடம் ராமனின் மோதிரத்தை அழித்து கூறியவை யாவை அதற்கு சீதை அளித்த மறுமொழி யாது ?

41. பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகள் எவையெவை என்று இளம்பெருவழுதி பட்டியலிடுகிறார் ?

அல்லது

இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

XII. கீழ் வரும் செய்யுளை விளக்கிக்கி எழுதுக. 1×3 =3

42. ''மாளிகை எடுத்தோர் மாடங்களைக் கட்டியோர்
தாளடிக்கீழ் சிக்கியோரும் என்மக்களே
வீதியிலே வீழ்ந்தோர் நாதியற்றுக் கிடந்தோர்
மனசுக்குள்ளே மருகுவோரும் என் மக்களே''.

அல்லது

''உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியிலே கலக்குது
ஒற்றுமையில்ல மனித குலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது''.

Visit CollegeDekho

XIII. பின்வரும் உரைநடை பகுதியை படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும். 2×2=4

43. சேர ,சோழ, பாண்டியர்கள் தமிழகத்தை ஆண்டார்கள் . அந்நாடு நீர் வளமும், ஏனைய வளங்களும் நிறைய பெற்றதாய் விளங்கிற்று .அம்மு வேந்தர்களும் குடிமக்களுக்கு அவ்வப்போது நீதி வழங்கிய நிகரற்ற பேரரசர்களாய் விளங்கினார்கள். பாண்டியர் மதுரையை தலைநகராக கொண்டு ஆண்டு வந்தனர். அவ்வப்போது மக்களின் இன்னல்களை போக்கி நீதி முறை செய்தனர்.

**வினாக்கள்:**

அ. மூவேந்தர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் யார்?

ஆ. மூவேந்தர்களின் ஆட்சி முறையை எவ்வாறு இருந்தது ?

XIV. மடல் எழுதுக. 1×5=5

44. நீ கண்டு மகிழ்ந்த புத்தக கண்காட்சி குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

அல்லது

நீ வசிக்கும் பகுதியில் ஆரம்ப சுகாதார மையம் அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கடிதம் எழுதுக.

XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக. 1×5= 5

45. ‘‘ சுற்றுப்புறத்தூய்மை’’.

அல்லது

‘‘இயற்கையை பாதுகாப்போம்’’

Visit CollegeDekho